DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THENI

C.C.No.309/15

Deposition of Witness: PW 4

| | |
|---|---|
| Name ஜெயபிரகாஷ் | Father's Name |
| Village | Taluk |
| Caste | Calling |
| Religion | Age |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 04.03.2019

அரசு தரப்பில் முதல் விசாரணை:

நான் சிவலிங்கநாயக்கன்பட்டியில் குடியிருந்து விவசாய கூலி வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கின் விபரம் எனக்கு தெரியும். நான் சுருளியம்மாள் சார்பில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். சுருளியம்மாள் என்பவர் வேலுச்சாமி என்பவரிடம் இருந்து நிலத்தை கிரயம் வாங்கி விவசாயம் செய்து வந்தார். குடும்ப சூழ்நிலை காரணமாக நிலத்தின் ஒரு பகுதியை எங்கள் ஊரைச்சேர்ந்த சௌந்தராஜன் என்பவருக்கு கிரயம் செய்து கொடுத்தார். சௌந்தராஜன் அவர் சொந்த அனுபவத்தில் வைத்து வருகிறார். கடந்த 2014ம் வருடம் வழக்கின் எதிர்மனுதாரர்கள் சுரேஷ், ராமசந்திரன், வேலுச்சாமி ஆகியோர்கள் சுருளியம்மாள் வீட்டிற்கு வந்தார்கள். 23 வருடத்திற்கு முன்பு நீங்கள்வாங்கிய நிலத்திற்கு தற்போதைய மார்க்கெட் மதிப்பு அதிகமாக உள்ளதால் 3 லட்சம் தரவேண்டும் என்றும் , சாட்சி மீண்டும் 2லட்சம் என கூறுகிறார். அவ்வாறு தரவில்லை என்றால் நாங்கள் பொய்யாக புகார் கொடுத்து ஜெயிலுக்கு அனுப்புவோம் என்று மிரட்டினார்கள். இது சம்மந்தமாக சுருளியம்மாளுக்கும் எதிர்மனுதாரருக்கும் பிரச்சனை ஏற்பட்டது. நான் பக்கத்து நிலக்காரன மற்றும் குபேந்திரன் பாண்டி, சௌந்தராஜன், விஜயபாண்டி மற்றும் பக்கத்தில் இருப்பவர்கள் வந்து விலக்கிவிட்டோம். சுருளியம்மாள் இது சம்மந்தமாக காவல்நிலையத்திற்கு புகார் கொடுத்தார். காவல்நிலையத்தில் எந்த விதமான மேல்நடவடிக்கையும் எடுக்கவில்லை. கடந்த 4.12.14ம் தேதி மாவட்ட குற்றபிரிவு கண்காணிப்பாளரிடம் சுருளியம்மாள், சௌந்தராஜன், விஜயபாண்டி சென்றதாக என்னிடம் சொன்னார்கள். நானும், குபேந்திரபாண்டி, துரைப்பாண்டி, ராஜேஷ் மற்றும் எங்கள் ஊரைச்சேர்ந்தவர்கள்

மாவட்ட குற்றபிரிவு அலுவலகத்திற்கு சுமார் 10.00மணிக்குசென்றோம். அங்கு மாவட்ட குற்றபிரிவு அலுவலகம் குற்றபிரிவு ஆய்வளராக இருந்த ஜாஸ்மின்மும்தாஜ் அவர்கள் இந்த வழக்கின் எதிர்மனுதாரர்கள் இருந்தார்கள். ஆய்வாளர் ஜாஸ்மின்மும்தாஜ் அவர்கள் வேலுச்சாமியிடம் வாங்கிய நிலத்தை அவரிடம் திரும்ப எழுதிக்கொடுக்குமாறு சுருளியம்மாளிடம் கூறினார். சுருளியம்மாள் சம்மதிக்க மறுத்துவிட்டார். மாலை 5.00மணிவரை அங்கு உட்கார வைத்துவிட்டார்கள். மாலை 5.00மணிக்கு மீண்டும் காவல் துறை ஆய்வாளர் ஜாஸ்மின்மும்தாஜ் அவர்கள் நீங்கள் நிலத்தை வேலுச்சாமி என்பவரிடம் எழுதிக்கொடுத்தால் தான் வீட்டிற்கு விடுவோம் என்றும் இல்லை என்றால் ஜெயிலுக்கு அனுப்பிவிடுவோம் என்று கூறினார். ஜெயிலுக்கு சென்றால் அசிங்கம் என்று கருதிய சுருளியம்மாள் மற்றும் சௌந்தராஜனும் நிலத்தை வேலுச்சாமிக்கு எழுதிக்கொடுத்துவிடலாம் என்று முடிவு செய்தார்கள். உடன் இருந்த குற்றபிரிவு காவல்அலுவலரை மாவட்ட பத்திர பதிவு அலுவலகம் தேனிக்கு அனுப்பி பத்திரத்தை ரத்து செய்ய சொல்லி சுருளியம்மாள் மற்றும் சௌந்தராஜனை அனுப்பி வைத்தார்கள். நாங்கள் பத்திரபதிவு அலுவலகத்திற்கு வரும்போது மாலை சுமார் 6.00மணி இருக்கும். 6.00மணி ஆனதால் பத்திரம் பதியமுடியாது என்று கூறிவிட்டார்கள். உடன் இருந்த காவலர் நாங்கள் எஸ்பி ஆபிசில் இருந்து வருவதாக கூறி பத்திரம் பதிய கூறினார். அப்போது உடன் இருந்த எதிர்மனுதாரர்கள் கொடுத்த பத்திரத்தின் அடிப்படையில் காவலர் முன்னிலையில் சௌந்தராஜன் மற்றும் சுருளியம்மாளும் கையெழுத்து செய்தார்கள். மீண்டும் சுருளியம்மாள், சௌந்தராஜனை மாவட்ட குற்றபிரிவு அலுவலகத்திற்கு அழைத்து சென்றனர். அங்கு காவல் துறை ஆய்வாளர் ஜாஸ்மின்மும்தாஜ் அவர்கள் நீங்கள் சௌந்தராஜன், சுருளியம்மாளிடம் வாங்கிய நிலத்தை ரத்து செய்து கொடுத்துவிட்டார். எனவே ரத்து பதிவு பத்திரம் கிடைத்தவுடன் சுருளியம்மாள் இந்த நிலத்தை வேலுச்சாமி மற்றும் ராமசந்திரனுக்கு எழுதிக்கொடுக்கவேண்டும் என்று மிரட்டி அனுப்பி வைத்துவிட்டார். இது சம்மந்தமான விசயங்கள் எனக்கு நேரடியாக தெரியும். நான் உடன் இருந்தேன்.

குறுக்கு விசாரணை: இல்லை